( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-15


## வினாத்தாள் - I


சுட்டெண்:- ..................................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01)







இவ்வுருவில்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே,

(1) C, E ஆகும். (2) B, A ஆகும். (3) D, B ஆகும்


(02) பின்வரும் 1, 2, 3 ஆகிய உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, அடுத்து வரவேண்டிய உருவினைத் தெரிவு செய்க.



உரு 1 உரு 2 உரு 3

(1)  (2)  (3) 


(03)






A, B, C, D ஆகிய ஒவ்வொரு கூட்டிலும் உள்ள மிகச் சிறிய இலக்கத்தை பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப் பெரிய எண்,

(1) 9875 (2) 5321 (3) 1235

(04) பின்வரும் கூட்டில் தரப்பட்டுள்ள எல்லாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தி ஆக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3) 

(05) உமாவிடம் ரூபாய் 1000.00, ரூபாய் 500.00 மற்றும் ரூபாய் 100.00 ஆகிய நாணயத் தாள்களில் மாத்திரம் ரூபாய் 2000.00 இருந்தது. அதன்படி, அவளிடம் உள்ள ரூபாய் 100.00 நாணயத் தாள்களின் எண்ணிக்கை,

(1) 10 (2) 5 (3) 4

(06) "மேலும் கோபமூட்டச் செய்தல்" என்ற கருத்தை உணர்த்தும் உவமைத் தொடர்,


(1) ஆகாயத்தில் கோட்டைக் கட்டுவதுபோல் (2) இலைமறை காய்போல்

(3) எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற்போல்.

(07) மோகனின் வீட்டிலுள்ள கடிகாரத்தின் நேரம் எப்போதும் சரியான நேரத்திலும் பார்க்க 20 நிமிடங்கள் கூடுதலாக காட்டும். வீட்டிலுள்ள கடிகாரத்தின் நேரத்திற்கேற்ப பிற்பகல் 1.50 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட மோகன் வைத்தியசாலைக்குச் செல்லும்போது சரியான நேரத்தைக் காட்டும் வைத்தியசாலைக் கடிகாரத்தின் நேரம் பிற்பகல் 3.30 ஆக இருந்தது. அதன்படி, அவன் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குச் செல்வதற்கு எவ்வளவு நேரம் எடுத்தது?

(1) 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (2) 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் (3) 2 மணித்தியாலங்கள்

(08)



இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின்,

(1) $\frac{1}{8}$ (2) $\frac{1}{6}$ (3) $\frac{2}{10}$


(09)


| | | | |
|---|---|---|---|
| 22 | 12 | 27 | 11 |
| 9 | 18 | 6 | 19 |
| 20 | 25 | 15 | 4 |


கூட்டினுள் உள்ள 3 இனால் மிகுதியின்றி வகுபடக்கூடிய மிகச் சிறிய எண்ணையும் 2 இனால் மிகுதியின்றி வகுபடக்கூடிய மிகப் பெரிய எண்ணையும் பெருக்கும்போது கிடைக்கும் விடை,

(1) 132 (2) 108 (3) 124

(10)









தராசு ஒன்றில் 3 பொருட்கள் நிறுக்கப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களை இவ்வுருக்கள் காட்டுகின்றன. இவ்வுருக்களுக்கேற்ப, ஒவ்வொரு பொருளினது நிறை படிப்படியாக அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் வரையப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

kalvi.lk

(11) உருவில் காணப்படும் திண்மத்தைப் முறிந்த கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்,




(1) 
(2) 
(3) 

(12) "நுளம்பு எமது உடல்களில் தேனை உறிஞ்சிக் குடிக்கிறது." இவ்வாக்கியத்தை கருத்துள்ளதாக இருப்பதற்கு செய்ய வேண்டிய மாற்றம்,

(1) "நுளம்பு" என்பதற்கு பதிலாக "வண்ணத்துப்பூச்சி" எனச் சேர்த்தல்.


(2) "தேனை" என்பதற்கு பதிலாக "இரத்தத்தை" எனச் சேர்த்தல்.

(3) "உடல்களில்" என்பதற்கு பதிலாக "மலர்களில்" எனச் சேர்த்தல்.

(13) 


இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி, எத்தனை சிறிய சதுரங்களுக்கு சமனாகும்?

(1) 9 (2) 10 (3) 8

(14) 


உருவில் காணப்படும் வடிவம் உள்ள தாளை முதலில் முறிந்த கோட்டின் வழியே இரண்டாக மடித்து, இரு பக்கங்களையும் சேர்த்து புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் செவ்வகங்களின் எண்ணிக்கையும் முறையே,


(1) 4 உம், 1 உம் (2) 6 உம், 2 உம் (3) 6 உம், 1 உம்

(15) 


நடைப்பயிற்சிக்காக ஒரு விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள சில பாதைகளை காட்டும் உரு அருகே தரப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு சிறிய சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் 1 சென்ரிமீற்றர் ஆகும். ஒரு சென்ரிமீற்றரினால் 5 மீற்றர் தூரம் காட்டப்படுகின்றது. ஒரு பிள்ளை A யிலிருந்து ஆரம்பித்து B, C, D, E, B, F, G ஆகியவற்றை கடந்து H இற்கு வருகின்றது. அதன்படி, அப்பிள்ளை நடந்த தூரம் எத்தனை மீற்றர்,

(1) 17m (2) 85m (3) 65m

* C, R எனினும் இரு நகரங்களுக்கு இடையே உள்ள தூரம் 15 கிலோமீற்றர் ஆகும். ஒரு குறித்த நாளில் மு.ப 8.00 இற்கு ரமேஷ் C யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 3 கிலோமீற்றர் வேகத்தில் R யை நோக்கிச் செல்கின்றான். ரவி அதே நேரத்தில் R யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 2 கிலோமீற்றர் வேகத்தில் C யை நோக்கிச் செல்கின்றான்.





(16) ரமேஷ் மற்றும் ரவி சந்திப்பது,

(1) K எனும் இடத்தில் (2) M எனும் இடத்தில் (3) L எனும் இடத்தில்

(17) ரமேஷ் மற்றும் ரவி சந்திக்கும்போது நேரம்,

(1) மு.ப 11.00 (2) நண்பகல் 12.00 (3) பி.ப 1.00

(18) பின்வரும் உருக்களை ஏதோவொரு கோலத்திற்கேற்ப மீண்டும் ஒழுங்குபடுத்தும்போது சரிநடுவில் வரும் உருவைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.




(1) B (2) E (3) A

(19) கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலத்தை உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண் மற்றும் அதே எண்ணுக்குப் பதிலாக சேர்க்க வேண்டிய எண்ணை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

3, 9, 15, 20, 27, 33

(1) 27, 26 (2) 15, 17 (3) 20, 21

kalvi.lk

(20) A, B, C என்ற மூன்று பெட்டிகளில் பந்துகள் உள்ளன.

- C பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கையைப்போல் மூன்று மடங்கு B பெட்டியில் உள்ளன.
- B, C பெட்டிகளில் உள்ள பந்துகளின் கூட்டுத்தொகை A பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.
- B பெட்டியிலுள்ள இரு பந்துகளை C பெட்டியில் இட்டால் B பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை 10 ஆகும்.

இவ்விபரங்களுக்கேற்ப, A பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை,

(1) 14 (2) 16 (3) 18

(21) கடையொன்றிற்கு முன் பின்வரும் அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர வாரத்தின் ஒவ்வொரு நாளும்**
**மு.ப 7.00 தொடக்கம் மு.ப 11.00 வரைக்கும்**
**பி.ப 3.00 தொடக்கம் பி.ப 8.00 வரைக்கும் இக்கடை திறந்திருக்கும்.**

மேலேயுள்ள விபரங்களுக்கேற்ப, ஒரு வாரத்தில் இக்கடை திறந்திருக்கும் மொத்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை,

(1) 28 மணித்தியாலங்கள் (2) 42 மணித்தியாலங்கள் (3) 45 மணித்தியாலங்கள்

(22) இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்கள் அமைந்துள்ள விடையைத் தெரிவு செய்க.

காலை முதல் வேலை செய்து .................................... இருந்த தொழிலாளர்கள் தேநீர் .............................. கடைக்குச் சென்றனர்

(1) சோர்வாக - குடிக்க (2) மகிழ்ச்சியாக - சாப்பிட (3) தோல்வியுற்ற - தயாரிக்க

(23)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 6 | 9 | | 27 | 30 |
| 4 | 8 | 12 | | | 33 |
| | | 16 | | B | |
| | A | | 40 | | |

கூடுகளில் இலக்கங்கள் ஒரு கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப A, B ஆகிய ஆங்கில எழுத்துக்களுக்குப் பொருத்தமான எண்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) A = 30, B = 24 (2) A = 36, B = 18 (3) A = 32, B = 21

(24)

IX XIX VI XX XI III IV

மேலே உரோம எண்குறிகள் எழுதப்பட்டுள்ள கார்ட்போர்ட் அட்டைகளை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் வைத்துப் பார்க்கும்போது பெறுமதி மாற்றம் இன்றி காணக்கிடைக்கும் கார்ட்போர்ட் அட்டைகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 2 (3) 4

(25) விலங்குப் பண்ணையொன்றில் உள்ள மாடுகளின் கால்களின் எண்ணிக்கை, கண்களின் எண்ணிக்கை மற்றும் வால்களின் எண்ணிக்கை என்பவற்றின் கூட்டுத்தொகை 42 ஆகும். அதன்படி, விலங்குப் பண்ணையிலுள்ள மாடுகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 7 (2) 6 (3) 5

(26) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

குளிரைப் போக்கக் கம்பளியும்
குடிக்கப் பாலும் நமக்கெல்லாம்
அளிக்கும் நல்ல மிருகமது
அண்டிப் பிழைக்கும் நம்மை இது

இப்பாடலில் வர்ணிக்கப்படும் பிராணி,

(1) பசு (2) குதிரை (3) காளை

(27) நீளம், அகலம், உயரம் ஆகியன 4cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 1cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 68 (2) 56 (3) 64

(28) 2065 ஆம் ஆண்டு உரித்தாவது,

(1) 21 ஆம் நூற்றாண்டின் 6 ஆம் தசாப்தத்திற்கு (2) 21 ஆம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தத்திற்கு

(3) 20 ஆம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தத்திற்கு

(29)

**2022 - 9 - 24**
**2023 - 4 - 18**

ஜேம் போத்தலிலுள்ள மேலுறையின் ஒரு பகுதி அருகே தரப்பட்டுள்ளது. இந்த ஜேம் போத்தலை பயன்படுத்துவதற்கு மிகவும் உகந்தது,

(1) 2023 - 5 - 1 (2) 2022 - 8 - 10 (3) 2022 - 12 - 30

(30) ஒரு குறித்த விழாவில் 4 மெழுகுவர்த்திகளை ஏற்றுவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு மெழுகுவர்த்தி ஒளிரும் நேரம் 10 நிமிடங்கள் ஆகும். ஒரு மெழுகுவர்த்தி அணைந்து ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மற்ற மெழுகுவர்த்தி எரிந்தது. முதல் மெழுகுவர்த்தியை மு.ப 9.00 மணிக்கு ஏற்றினால் நான்காவது மெழுகுவர்த்தி எந்த நேரத்தில் அணைந்திருக்கும்?

(1) மு. ப 9.55 க்கு (2) மு. ப [illegible]45 க்கு (3) மு. ப 10.00 க்கு

kalvi.lk

(31) 

இவ்வுருவின்படி, கீழே தரப்பட்டுள்ள கருத்துக்களுள் மிகச் சரியான கருத்தைத் தெரிவு செய்க.

(1) தாத்தா, பாட்டி மற்றும் பேரன் வீதியில் செல்கின்றனர்.

(2) அப்பா, அம்மா மற்றும் மகன் வீதியில் செல்கின்றனர்.


(3) மூவர் வீதியில் செல்கின்றனர்.

(32) ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் வாந்திபேதி அடிக்கடி பரவி வருகிறது. அதற்கான பிரதான காரணமாக அமைவது,


(1) அந்த கிராமத்து மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் என்பதனாலாகும்.


(2) அந்த கிராமத்து மக்களுக்கு தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்கும் பழக்கம் இல்லை என்பதனாலாகும்.


(3) கிராம வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு உள்ளது என்பதனாலாகும்.


(33) 

இவ்வுரு தாயக்கட்டை ஒன்றினை மூன்று திசைகளினால் பார்க்கும்போது புலப்படும் முறை காட்டப்பட்டுள்ளது. இத்தாயக்கட்டை செய்யப்பட்ட கார்ட்போர்ட் அட்டையை விரித்தால் காணக்கிடைக்கும் முறையைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(34) 

இக்கூடுகளினுள் மிகவும் அதிகமாக காணக்கிடைப்பது,

(1) இலக்கங்கள்

(2) குறியீடுகள்


(3) எழுத்துக்கள்

(35) மகனின் வயது 13 வருடங்களும் உயரம் 120 சென்ரிமீற்றரும் ஆகும். தந்தையின் வயது 53 வருடங்களும் உயரம் 170 சென்ரிமீற்றரும் ஆகும். அதன்படி, மகனின் வயது 18 வருடங்களும் உயரம் 150 சென்ரிமீற்றரும் ஆகும்போது தந்தையின் வயது மற்றும் உயரம்,

(1) வயது 58, உயரம் 200 cm (2) வயது 58, உயரம் 170 cm (3) வயது 60, உயரம் 170 cm


(36) ஒரு வகுப்பில் 18 பிள்ளைகள் உள்ளனர். அவர்களிடம் பத்து மாம்பழங்களும், ஒன்பது அன்னாசிப்பழங்களும் இருந்தன. சில பிள்ளைகளிடம் மாம்பழம் மட்டுமே இருந்தது. சில பிள்ளைகளிடம் அன்னாசிப்பழம் மட்டுமே இருந்தது. ஐந்து பிள்ளைகளிடம் மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழம் ஆகிய இரு வகையான பழங்களும் இருந்தன. அதன்படி, ஒரு பழம் கூட இல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 5

(37) 


இவ்வுரு வாகனத்தின் வேகத்தை மணிக்கு கிலோமீற்றரில் காட்டுகிறது. அதன்படி, இப்போது வாகனத்தின் வேகம் மணிக்கு கிலோமீற்றர்,

(1) 53 (2) 56 (3) 54

(38) 


நான்கு பிள்ளைகள் ஒரு சீசோவின் இரு பக்கங்களிலும் ஏறி நின்றுகொண்டிருக்கும் விதத்தை இவ்வுரு காட்டுகிறது. நான்கு பிள்ளைகளின் மொத்த நிறை 100kg ஆகும். சீசோ சமநிலையானது. அதன்படி, ஒவ்வொரு பிள்ளையினதும் நிறை படிப்படியாக அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதினால் கிடைப்பது,

(1) கதிர் - ரமேஷ் - சுரேஷ் - ரவி (2) கதிர் - ரவி - சுரேஷ் - ரமேஷ் (3) சுரேஷ் - கதிர் - ரமேஷ் - ரவி

(39) "அமாவாசை தினத்தில் இரவில் நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது தூரத்தில் வௌவால் கூட்டம் கூட்டமாக பறந்து கொண்டிருப்பதைக் கண்டேன்." இக்கூற்று பிழையானது. இதற்கான காரணம்,

(1) அமாவாசை தினத்தில் வானத்தில் நட்சத்திரங்கள் காணக்கிடைக்காது.

(2) வௌவால்கள் இரவில் பறப்பதில்லை என்பதனாலாகும்.

(3) அமாவாசை தினத்தில் பறக்கும் வௌவால்களைப் பார்க்க முடியாது என்பதனாலாகும்.

(40)
- ஓர் இலக்கத்தை நினைத்துக்கொள்க.
- அதனை 2 ஆல் பெருக்குக.
- அதனுடன் 2 ஐக் கூட்டுக.
- அதை 2 ஆல் வகுக்குக.
- அதிலிருந்து 1 ஐக் கழிக்குக.

கிடைக்கும் விடை நீர் முதலில் சிந்தித்த இலக்கத்திற்கு,

(1) குறைந்தது.

(2) சமனானது.

(3) ஒன்றினால் கூடியது.

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-15

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ...........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
* **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

நான் ஒரு நோய் தீர்க்கும் அற்புதமானவன். நான் தயாரிக்கும் மருந்து மிக இனிமையானது. ஆனால் கொஞ்சம் கொடியவன். நாங்கள் பலர் சேர்ந்து உருவாக்கும் மருந்தை நூற்றுக்கு மேற்பட்ட நோய்களுக்குப் பயன்படுத்தலாம். நாங்கள் மலைகளிலும், மரங்களிலும் எமது வாழ்விடத்தை அமைக்கின்றோம். எங்கள் அருமை அறியாமல் சிலர் எங்களை மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள்.

(i) இங்கு தன்னைப் பற்றி கூறுவது எது? ...........................................................

(ii) இங்குள்ள குணப்பெயரை எழுதுக. ...........................................................

(iii) பந்தியில் வந்துள்ள உயர்திணை தன்மை பன்மைச் சொல் எது? ...........................................................

(iv) "சிலர்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. ...........................................................

(v) "பிணி" என்பதைக் குறிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. ...........................................................

**(02) சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொற்களின் கீழ் கோடிடுக.**

(i) மருத்துவர்கல் , மறுத்துவர்கள் , மருத்துவர்கள்    (ii) சுயநலவாதி , சுயனலவாதி , சுயநளவாதி

(iii) ஐம்புலன்கல் , ஐம்புலண்கள் , ஐம்புலன்கள்

**(03) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

(i) உலோபி :- ...........................................    (ii) ஏற்றம் :- ...........................................

**(04) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான அடுக்குமொழியை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

( குலைகுலை , வண்ணவண்ண , தவழ்ந்துதவழ்ந்து , சுவைத்துச்சுவைத்து , புரட்டிப்புரட்டி )

(i) ஆசிரியர் பத்திரிகையை ...................................... வாசித்தார்.    (ii) கமலா ......................................ச் சேலைகளை வாங்கினாள்.

(iii) குழந்தை வீட்டினுள் ...................................................... வந்தது.

**(05) பின்வரும் வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

ஆசிரியர்கள் பேருந்திலிருந்து இறங்கி பாடசாலைகளுக்குச் சென்றார்கள்.

...........................................................................................................

**(06) "உயரமான பிள்ளை பழைய ஈருருளியை வேகமாக மிதித்தது." இவ்வாக்கியத்திலுள்ள,**

(i) செயற்படுபொருள் அடைமொழியை எழுதுக. ...........................................................

(ii) பயனிலை அடைமொழியை எழுதுக. ......................................    (iii) எழுவாய் அடைமொழியை எழுதுக. ......................................

**(07) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் அறிவித்தலாயின் ( ✓ ) எனவும், அறிவுறுத்தலாயின் ( ✗ ) எனவும், கட்டளையாயின் (0) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) எல்லாப் புத்தகங்களையும் இடது பக்கத்திலுள்ள தட்டில் வையுங்கள். (    )

(ii) வினாப்பத்திரத்தை நன்கு வாசித்த பின்னர் வினாக்களுக்கு விடைகளை எழுதத் தொடங்குக. (    )

(iii) கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. (    )

(08) இலக்கம் 12, புத்தளம் வீதி, அநுராதபுரம் எனும் முகவரியில் வசிக்கும் கணேஷ் சுந்தரலிங்கம் என்பவருக்கு இலக்கம் 24, கண்டி வீதி, குருநாகல் எனும் முகவரியில் வசிக்கும் ரவி சுப்ரமணியம் என்பவரால் பதிவுத் தபால் மூலம் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அவர் கடித உறையில் பெயர்களும் முகவரிகளும் எழுதிய முறையை கூட்டினுள் எழுதுக.

Kalvi.lk

| From:- | To:- |
|---|---|
| .................................................... | .................................................... |
| .................................................... | .................................................... |
| .................................................... | .................................................... |

**(09) பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) "பார்த்தது" என்பது அஃறிணை, இறந்தகால, ஒருமை வினைச்சொல்லாகும். (   )

(ii) "ஆசிரியர்" என்பது உயர்திணை, படர்க்கை, பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (   )

(iii) "பாடினான்" என்பது உயர்திணை, பெண்பால், ஒருமை, இறந்தகால வினைச்சொல்லாகும். (   )

**(10) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) Open the door :- ........................................ (ii) Throw the ball :- ........................................

**(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) How many books .................. ( is / are ) there. (ii) I live ................ ( in / on ) Sri Lanka.

(iii) There are stars .............. ( on / in ) the picture.

**(12) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்ட கட்டங்களுக்குள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

(i)  :- ☐☐☐☐

(ii)  :- ☐☐☐☐☐☐☐☐☐

**(13) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

ஒபே மல்லி கொஹேத? :- ..............................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

இங்கே பாருங்கள் :- ..............................................................

(15) (i) ☐☐☐☐☐☐☐☐☐☐ இச்செவ்வகத்தில் 0.4 பங்கை நிழற்றிக் காட்டுக.

(ii)  இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணாக எழுதுக. ..............................

(16) பிள்ளையொன்று 20 மீற்றர் முன்னால் பயணித்து, அதன் பின்னர் அங்கிருந்து தனது வலதுக் கைப்பக்கத்திற்கு திரும்பி தென்கிழக்குத் திசைக்குப் பயணித்தது. அதன்படி, அப்பிள்ளை ஆரம்பத்தில் பயணித்த திசை யாது? ..............................

(17) VII + ☐ = IX + ☐ இவ்வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான இரு உரோம எண்குறிகளையும் வெற்றுக்கூடுகளின் உள்ளேயே எழுதுக.


(18) புகையிரதமொன்றிலுள்ள பயணிகளின் எண்ணிக்கை 1010 ஆகும். புகையிரத தரிப்பிடமொன்றில் அப்புகையிரதத்திலிருந்து 279 பயணிகள் இறங்கி, 389 பயணிகள் புகையிரதத்தில் ஏறினர். அதன்படி, தற்போது புகையிரதத்தில் இருக்கும் பயணிகளின் எண்ணிக்கை யாது? ..............................

(19) உருளையொன்றிலும் நான்முகியொன்றிலும் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகை யாது? ..............

(20) "அறுபத்து ஒன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தேழு" எனும் எண்ணின் நான்கு இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி அமைக்கக்கூடிய நான்கு இலக்கங்களைக் கொண்ட மிகப் பெரிய எண் யாது? ..............................

(21) 


திணேஷ் வீட்டிலிருந்து 17:20 மணிக்கு வெளியேறி மீண்டும் 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்கு பின்னர் வீட்டிற்கு வருகைத் தந்தான். அதன்படி, அவன் வீட்டிற்கு வருகைத் தந்த நேரத்தை இக்கடிகார முகத்தில் வரைந்துக் காட்டுக.

(22) 

இவ்வுரு ஒருபக்கம் 1cm நீளத்தைக் கொண்ட ஒரேயளவான சிறிய சதுர வடிவங்களினால் அமைக்கப்பட்டுள்ளது.

(i) இவ்வுருவில் காணக்கிடைக்கும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..............................

(ii) இவ்வுருவில் உள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது? ..............................


(23) பேனையொன்றின் விலை ரூபாய் 80.00 ஆகும். 3 பேனைகளை கொள்வனவு செய்து வியாபாரியிடம் ரூபாய் 100.00 நாணயத் தாள்கள் 3 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் யாது? ..............................

(24) புத்தகமொன்றின் விலை ரூபாய் 34.50 ஆகும். என்னிடம் ரூபாய் 50.00 உள்ளது. அதன்படி, 2 புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு என்னிடம் குறைவாக உள்ள பணம் எவ்வளவு? ..............................

kalvi.lk

சுட்டெண்:-......................................

(25) A, B எனும் இரு கிராமங்களிலுள்ள வீடுகளின் எண்ணிக்கைத் தொடர்பான தகவல்களை பின்வரும் பட வரைபு காட்டுகிறது. A கிராமத்திலுள்ள வீடுகளின் எண்ணிக்கை 80 ஆகும்.




இப்பட வரைபிற்கேற்ப, கீழே வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(i) இரு கிராமங்களிலும் உள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை யாது? ....................

(ii) A கிராமத்தை விட B கிராமத்தில் கூடுதலாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது? ..........

(26) கீழே தரப்பட்டுள்ள எண்வரிசையில் இரு எண் கோலங்கள் உள்ளன. இவ்வெண் கோலங்களை இனங்கண்டு இரு வெற்றுக்கூடுகளுக்கும் பொருத்தமான எண்களை வெற்றுக்கூடுகளினுள்ளேயே எழுதுக.

4 , 2 , 8 , 8 , 12 , 14 , 16 , 20 , ☐ , ☐

(27) அண்ணனின் நிறை 64kg 300g ஆகும். தம்பியின் நிறை 31kg 700g ஆகும். அதன்படி, அண்ணன் தம்பியை விட எவ்வளவு நிறை கூடியவர்? ..............................................................................

(28) ஒரு சட்டையைத் தைப்பதற்கு 2m 80cm துணி தேவை. அத்தகைய 4 சட்டைகளைத் தைப்பதற்குத் தேவைப்படும் துணியின் அளவு யாது? ..............................................................................

(29) சேகர் பரிசளிப்பிற்காக 769 புத்தகங்களை 6 வீதம் கொண்ட பொதிகளாகக் கட்டினான்.

(i) 6 புத்தகங்கள் வீதமான எத்தனை பொதிகள் உள்ளன? ..............................................


(ii) அத்தகைய ஒரு பொதியைச் செய்வதற்கு எஞ்சியிருக்கும் புத்தகங்களுடன் மேலும் எத்தனை புத்தகங்கள் தேவை? ......

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) தாவரங்களின் தண்டுகளை தனது அலகினால் துளையிட்டு பொந்து ஒன்றை அமைத்துக்கொள்ளும் பறவை,
(1) பருந்து (2) மரங்கொத்தி (3) கொக்கு

(31) உலகின் மிக உயரமான மலையான எவரெஸ்ட் மலை உச்சிக்கு ஏறிய முதல் இலங்கையர்,
(1) ஜயந்தி குரு உதும்பலா (2) சேர். எட்மண்ட் ஹிலரி (3) டங்கன் வைட்

(32)




அருகில் தரப்பட்டுள்ள செயற்பாட்டின் முக்கியத்துவம்,
(1) நீரை சுத்தமாக்கும் முறையை காட்டுதல்
(2) மழைவீழ்ச்சியை அளவிடுதல்
(3) மழைநீர் நிலத்தில் விழும்போது மண்ணில் ஏற்படும் மாற்றங்களை கண்டறிதல்


(33) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் முதலாவதும், இறுதியானதுமான படிமுறைகள் முறையே,
(1) உடலைத் தளர்த்துதல், மலர்வு (2) உள்ளத்தைத் தளர்த்துதல், பிரார்த்தனை (3) உடலைத் தளர்த்துதல், மனவுறுதி

(34) அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள இடங்களில் ஒன்று அல்லாதது,
(1) பொலிஸ் நிலையம் (2) தனியார் மருத்துவமனை (3) பிரதேச செயலகம்

(35) முற்காலத்தில் இலங்கை பிரிக்கப்பட்டிருந்த மூன்று பகுதிகள்,
(1) ஊவா, சப்ரகமுவ, வடமத்திய (2) வடக்கு, தெற்கு, கிழக்கு (3) உருகுணை, மாயா, பிகிட்டி

(36) அரச இலச்சினையில் காணப்படாத அம்சம்,
(1) நெற்கதிர்கள் (2) அரச இலை (3) நிறைகுடம்

(37)



இப்படத்தில் காட்டப்பட்டுள்ளதன் பெயர்,
(1) அனிமாமானி (2) காற்றுத்திசைகாட்டி (3) நீர்ச் சுழலி

(38)



வரலாற்று முக்கியத்துவமுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள இடம்,
(1) தலதா மாளிகை (2) இசுருமுனியா (3) சீகிரியா

(39) இலங்கைக்கு விளையாட்டின் மூலம் பெருமையைத் தேடித்தந்தவர்களைக் கொண்ட தொகுதியாக அமையாதது,
(1) டங்கன் வைட், சுசந்திகா ஜெயசிங்க (2) முத்தையா முரளிதரன், ஜெயந்தி குரு உதும்பலா
(3) தமயந்தி தர்ஷா, டபிள்யு. டீ. அமரதேவ

(40) பின்வருவன மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எந்த படிமுறைக்குள் அடங்கும்?
- எனது கை கால்களைத் தளர்த்திக்கொள்கிறேன்.
- எனது தலை தளர்ந்துவிட்டது.
- எனது மார்பு / நெஞ்சு தளர்ந்துவிட்டது.


(1) உள்ளத்தைத் தளர்த்துதல். (2) உடலைத் தளர்த்துதல். (3) மனவுறுதி

kalvi.lk

(41) கோயில், மஸ்ஜித், விகாரை ஆகிய சமயத் தலங்களுடன் தொடர்புடைய பண்டிகைகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடை,
(1) தீபாவளி, றமழான், வெசாக் (2) தைப்பொங்கல், பாஸ்கு, நத்தார் (3) ஹஜ்ஜுப் பெருநாள், தீபாவளி, பொசொன்

(42) இரசாயனப் பசளையாக அமைவது,
(1) கூட்டெரு (2) மாட்டெரு (3) யூரியா

(43) தேசியக் கொடியிலுள்ள நான்கு அரச இலைகளும் குறிக்கும் பண்புகளுள் அடங்காதது,
(1) காருண்யம், இரக்கம் (2) ஒற்றுமை, நேர்மை (3) திருப்தி, பற்றின்மை

(44) சூழலில் வெளியேற்றுதலாகாது என்பதற்காக மின் இலத்திரனியல் சாதனங்களிலும் பகுதிகளிலும் காணப்படும் குறியீடு,
(1)  (2)  (3) 

(45) இலங்கையிலுள்ள தேசிய மரபுரிமையாக மட்டுமன்றி உலக மரபுரிமையாகவும் போற்றப்படுகின்ற இடம்,
(1) சிங்கராஜ வனம் (2) தாமரைக் கோபுரம் (3) பம்பரகந்த நீர்வீழ்ச்சி


(46) தாமரைக் கோபுரம் அமைந்துள்ள மாவட்டம்,
(1) கம்பஹா (2) கொழும்பு (3) புத்தளம்

(47) ஊசித்துளைக்கமரா ஒன்றை செய்யும்போது துளையிடுவது,
(1) கறுப்பு நிறத் தாளில் (2) வெள்ளை நிறத் ரிசுத்தாளில் (3) இரண்டு நிறத் தாள்களிலும்


(48) ஹூல்கந்துர தோட்டத்தில் நடப்பட்டது,
(1) இலங்கையின் முதலாவது இறப்பர் மரமாகும். (2) இலங்கையின் முதலாவது புளிய மரமாகும்.
(3) இலங்கையின் முதலாவது தேயிலைச் செடியாகும்.

(49) பெருக்க மரம் (Baobab tree) காணப்படும் நகரம்,
(1) ஓப்பநாயக்க (2) மன்னார் (3) குருநாகல்

(50) பராக்கிரமபாகு மன்னனின் சிலை காணப்படும் மாவட்டம்,
(1) பொலன்னறுவை (2) மட்டக்களப்பு (3) அநுராதபுரம்

(51) 
இவ்வுருவில் காணப்படும் மலை,
(1) சிவனொளிபாத மலை (2) பிதுருதாலகால மலை (3) சீகிரியா

- **இவ்விலங்கை தேசப்படத்தில் A, B, C, D, E ஆகியவற்றால் ஐந்து நகரங்கள் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இலக்கம் (52) தொடக்கம் (54) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தெரிவு செய்க.**




(52) இலங்கையின் தலைநகரம் அமைந்துள்ள நகரம்,
(1) B (2) A (3) E

(53) பௌத்த சமயத்தவர்களுக்கு மிகவும் முக்கியமான நகரம்,
(1) E (2) D (3) C

(54) மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் நகரம்,
(1) B (2) A (3) E

(55) பிராணிகள் மூலம் பரவும் வித்து வகை அல்லாதது,
(1) முருங்கை (2) துத்திரி (3) கத்தாப்பு

(56) "ஸ்டென்சில் அச்சுப்பதித்தல்" முறைக்கு அவசியமற்றவை,
(1) நிறப்பூச்சு, தூரிகை (2) கத்தி, தடித்த கார்ட்போர்ட் அட்டை (3) சிறிய வர்ணக் கடதாசித் துண்டுகள், பசை

(57) பறக்க முடியாத பறவைகள்,
(1) வௌவால், கொக்கு (2) தீக்கோழி, பென்குயின் (3) கழுகு, மீன்கொத்தி

(58) வானவில்லில் காணக்கிடைக்காத நிறம்,
(1) சிவப்பு (2) மஞ்சள் (3) கபிலம்

(59) இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை,
(1) பாக்கு நீரிணை (2) எலிபன்ட்பாஸ் நீரிணை (3) மன்னார் நீரிணை

**(60) "நான் ஏழை, பணக்காரன் என்ற சகலருக்கும் உதவும் மிதிவண்டியாவேன்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ........................................................................................................................................................

(2) ........................................................................................................................................................

(3) ........................................................................................................................................................

kalvi.lk